[10th November 1965

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) The Government of India have asked the State Governments to take necessary action (i) to revise the minimum rates of wages, wherever they are below Re. 1 a day; and (ii) to tighten up the State wage-enforcement machinery for agriculture for enforcement of the Minimum Wages Act, 1948. The suggestions of the Government of India are under consideration.

* 393 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விவசாய தினக்கூலித் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவுக் கூலி நிர்ணயச் சட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் பொருந்தும்படி சட்டம் கொண்டுவர அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு நிச்சயித்த குறைந்த அளவுக் கூலிகள், 1952-ம் ஆண்டு தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், 1958-ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி கைவர் வாரம், மாட்டு வாரம் சட்டம் அமலில் உள்ள பகுதிகள் நீங்கலாக தமிழ் நாட்டிலுள்ள மற்ற பகுதிகள் அனைத்திற்கும் பொருந்தும். வேளாண்மைத் தொழிலாளருக்கான குறைந்த அளவுக் கூலி விதங்களை மேற்படி பகுதிகளுக்கும் சேர்த்து விரிவுபடுத்த சட்டம் இயற்றும் நோக்கம் எதுவுமில்லை.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட சட்டங்களில் பண்ணையாளுக்கான கூலியைத்தான் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், கேள்வி போடப்பட்டது தினக்கூலித் தொழிலாளர்களைப்பற்றியது. அதாவது, தொழிலாளர்களுக்கு தினமும் எவ்வளவு கூலி அத்துக் கூலியாகக் கொடுக்கப்பட்டது. அப்படிப்பட்டவர்களுக்கு கூலியை நிர்ணயிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: விவசாயத்திலே வேலை செய்கின்றவர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கும் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்திலே இடம் இருக்கிறது.

திரு. கோ. சி. மணி: பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்திலே தினக்கூலி வேலை செய்பவர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்படவில்லை. அந்த தினக்கூலி அதாவது அத்துக் கூலி வேலை செய்பவர்களை வேண்டுமென்றால் வேலைக்கு வைத்துக்கொள்வார்கள் இல்லாவிட்டால் நீக்கி விடுவார்கள்—அப்படிப்பட்டவர்களுக்கு டெய்லி வேஜஸ் நிர்ணயம் செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. மாதவன்: விவசாயிகளுக்கு குறைந்தபட்ச கூலி கொடுக்கவேண்டும் என்று கொள்கை அளவிலே அரசாங்கம் ஏற்றுக்கொண்டதா? அல்லது இதை மாகாணம் முழுமைக்கும்

சட்டம் என்ற அளவிலே கொண்டுவராவிட்டாலும் வேறு ஏதாவது ஏற்பாடு செய்வதன் மூலம் குறைந்தபட்ச கூலி அளவை நிர்ண யிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கொள்கை அளவிலே அரசாங் கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் இருக்கிற நிலைமையைப் பார்த்தால் கண்டிப்பாக குறைந்தபட்சக் கூலியை நிர்ணயித்தால் அவர்கள் இப்போது வாங்குகிற ஊதியம் அதிகமாக இருக்கிறது— அதைக்கூடப் பாதிக்குமே என்ற அச்சம் இருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிக்காவிட்டாலும், அவர்கள் வேலை செய்யும் நேரத்தை— இவ்வளவு நேரம்தான் வேலை செய்யவேண்டுமென்று—கட்டுப் படுத்துகின்ற நிலையை சர்க்கார் உருவாக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறைந்தபட்ச ஊதியம் நிர்ண யிக்கப்படாவிட்டால் என்பதல்ல, குறைந்தபட்ச கூலி நிர்ண யம் செய்யப்பட்டிருக்கிறது. நேரத்தைக் கட்டுப்படுத்த வேண்டு மென்று சொன்னால், நேரம் முக்கியம் அல்ல வேலைதான் முக்கியம்.

அரசாங்க அலுவலர்கள் பிரயாணப்படிகள்

* 394 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : } கனம் முதல்
திரு. து. ப. அழகமுத்து : }
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா :—

அரசினர் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டுவரும் பிரயாணப் படிகளை திருத்தி அமைக்கும் திட்டம் ஏதேனும் இம்மாநில அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. து. ப. அழகமுத்து : இப்பொழுது வாழ்க்கைச் செலவுகள் எல்லாம் அதிகமாகிக் கொண்டிருக்கின்ற காரணத்தால், முன்பு கொடுக்கப்பட்ட விகிதமே கொடுக்கப்பட்டு வருவதால் அது அவர் களுக்குப் போதுமானதாக இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் உணர்வார்களா ? அப்படியானால், இந்த விகிதத்தை இனியாகிலும் மாற்றி அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது அப்போதைக்கப்போது பரிசீலிக்கப்படுகின்ற விஷயம். ஆகையால், இது எல்லாம் அப் போதைக்கப்போது பரிசீலிக்கப்படுவதால் இப்போது உயர்த்துவ தாக இல்லை என்று சொன்னேன்.

திரு. வை. சங்கரன் : அதிகாரிகளின் பிரயாணச் செலவு சம் பந்தப்பட்டவரை அதிகாரிகள் போகும் இடத்தில் சாப்பாட்டுச் செலவுகள், தங்கும் செலவுகள் அதிகமாகியிருக்கின்றன. மற்றச் செலவுகள் அதிகரித்துக்கொண்டுவருவதால்தான் டியர்னஸ்